மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.
இடைக்கப்பெற்றது
16 JUN 1997

பொது சன நூலகம்
பக்கங்கள் 4
17 JUN 1997
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது

# உதயதாரகை

கிறிஸ்தவ வாரப் பத்திரிகை

மலர்: 158 ஆரம்பம்: 1841 வெள்ளிக்கிழமை 13 - 6 - 1997 இதழ்: 14

'கர்த்தருக்குப் பயப்படுதல் ஜீவ ஊற்று; அதினால் மரணக் கண்ணிகளுக்குத் தப்பலாம்'

நீதிமொழிகள் 14. 27

# பேராயர் திருநிலைப்படுத்தலின் 4 ஆம் ஆண்டு நிறைவு!

"தன்னில் நம்பிக்கை கொண்டவரான இறைவன், தன்னிடம் பெரிய பொறுப்புகளைத் தந்ததற்காக அவருக்குப் பவுலடிகளார் எவ்வாறு நன்றி கூறினாரோ அதே வண்ணம் இன்று நமது பேராயர் ஜெபநேசன் அவர்களும் இறைவனுக்கு நன்றி கூறுகிறார்'' என்றார் அருள்திரு எஸ். பி. ஜெயசிங்கம் அடிகளார்.

நமது பேராயர் அருட்பெருங் கலாநிதி எஸ். ஜெபநேசன் அவர்கள் திருநிலைப்படுத்தப்பட்டு நான்காண்டு நிறைவை ஒட்டி தூய நற்கருணை ஆராதனை ஒன்று 30- 05- 97 காலை 7. 00 மணிக்கு வட்டுக்கோட்டை ஆசனக்கோவிலில் நடைபெற்றது. வேதப் பாடங்களை திரு நோயல் விமலேந்திரன் (ஆதீனச்செயலர்), திரு. சி. ஜெயரட்ணம் (ஆதீனப் பொருளாளர்) ஆகியோர் வாசித்தனர். அருள்திரு ரி. அசோககுமார் அவர்களால் லித்தானியா ஏறெடுக்கப்பட்டது. அருளுரையை ஆற்றும்போதே அருள்திரு எஸ். பி. ஜெயசிங்கம் அவர்கள் முன்கண்டவாறு கூறினார்

மேலும் அவர் கூறுகையில்:- ''இவருக்கு முன்னதாக இரு அத்தியட்சகர்கள் நமது ஆதீனத்தில் பணியாற்றினர். அவர்களும் நல்ல கல்வி அறிவும், கடவுள் பக்தியும் உள்ளவர்கள். இப்போது பேராயராக இருப்பவரும் இந்நற்பண்புகள் கொண்டவரே. பேரதேனிய பல்கலைக்கழகத்தில் பொருளாதாரம், சரித்திரம், தமிழ் ஆகிய பாடங்களில் B. A. பட்டம் பெற்றார். பின்பு ஆசிரியர் பணியில் அமர்ந்து தனது கலாநிதிப் பட்டத்தையும் பெற்றார். அரசடி இறையியல் கல்லூரியில் இறையியல் கற்ற இவர் நமது ஆதீனத்தின் குருவானார்.

இவரது தகைமைகளைக் கண்டுகொண்ட நமது ஆதீனம் இரண்டாவது பேராயர் ஓய்வு பெற்றபோது இவரை மூன்றாவது பேராயராக நியமித்தது. இவருக்குப் பல திறமைகள் உண்டு. தமிழ் ஆங்கில எழுத்து வல்லமை; கற்பிக்கும் திறன் என்பன வெகுவாகப் பெற்றவர். சமஸ்கிருதத்தையும் தனது பாடமாகப் படிக்கிறார் காலையில் இவரது வாயிலிருந்து தமிழ்க் கிறிஸ்தவப் பாடல்களை கேட்கலாம். இவரது பேராயர் வாழ்வில் இன்னும் பல காலமுண்டு. இவரை நாம் வாழ்த்துகிறோம். இன்னும் நீடூழி காலம் வாழ்ந்து எம்மத்தியில் இவர் தொடர்ந்து சேவை செய்ய அருள் தரவேண்டுமென இறைவனை வேண்டுகிறோம்'' என்று முடித்தார் அடிகளார்.

30- 05- 93இல் பேராயராக திருநிலைப்படுத்தப்பட்டு இன்று நான்காம் ஆண்டு நிறைவைத் தனது பேராயர் வாழ்வில் காணும் பேராயரை உதயதாரகை''யும் உளமார வாழ்த்துகிறது.

## வாசகர்களுக்கு!!

நீங்கள் எமக்கு அனுப்பும் ஆக்கங்கள் சுருக்கமானதாக ஆனால் விடயம் நிறைந்ததாக இருக்கட்டும்.

உங்களிடமிருந்து விமர்சனக் கடிதங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன,

எமது முகவரி:- ''ஆசிரியர்''
உதயதாரகை
ஆதீனக்காரியாலயம்
வட்டுக்கோட்டை

-ஆர்-

## பேராயர் ஞாபகார்த்தப் பரிசு

தென்னிந்திய திருச்சபை யாழ் ஆதீனத்தின் முதற் பேராயரான காலஞ்சென்ற அதி. வண. கலாநிதி சபாபதி குலேந்திரன் பேராயர் அவர்களின் நினைவாக செரம்பூர் சர்வகலாசாலையின் பேரவை ஒரு பரிசுத் திட்டத்தை அமைத்துள்ளது, இப் பரிசானது முதுமாணி இறையியலில் ( M. Th) மிஷன் இயல் என்ற துறையில் அதி விசேட சித்திப்பெறும் மாணவருக்கு வருடாந்தம் வழங்கப்படும். இந்த நோக்கத்திற்காக மறைந்த பேராயரின் நண்பர் ஒருவர் செரம்பூர் சர்வகலாசாலைக்கு நன்கொடை நிதியாக இந்திய ரூபா 25000/- அன்பளிப்பு செய்துள்ளார்.

✲

## பண்டத்தரிப்பு சேகரக்குரு

பண்டத்தரிப்புத் திருச்சபையின் சேகரக் குருவாக யாழ்ப்பாணக் கல்லூரியின் துணையதிபர் வண. A. A. போல் அவர்கள் நியமிக்கப் பட்டுள்ளார். அவர் அமெரிக்காவிலிருந்து திரும்பும் வரை பேராயர் அவர்களே பண்டத்தரிப்பு சேகரக் குருவாக இருக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

✲

## தென்னிந்திய த் திருச்சபையின் பொன்விழா

தென்னிந்திய திருச்சபையின் பொன்விழா நிகழ்ச்சிகள் 15-10-97 புதன் கிழமை வட்டுக்கோட்டையில் நடைபெறவிருக்கிறது. இவ் விழாவின் நிகழ்ச்சி நிரலுக்குப் பொறுப்பதிகாரியாக உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் கலாநிதி செல்வி. சி. வி. செல்லையா அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

✲

## இசையும், நாடகமும்

வருடாவருடம் தென்னிந்திய திருச்சபையினரால் நடாத்தப்பட்டு வரும் உயிர்த்தெழுந்த திருநாள் பஜனை இம்முறையும் ஈஸ்டர் ஞாயிறு பங்குனி மாதம் 30ம் திகதி பி. பகல் 2. 30 மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரி திறந்த வெளியரங்கில், பெருந் திரளான பக்கள் கூட்டத்துடன் உணர்ச்சி பூர்வமாக நடந்தேறியது. ஏறக்குறைய 150 பாடகர்களுடனும் இன்னிசை வாத்தியங்களுடனும், சிலுவைப் பாடுகளையும் உணர்த்தும் பாடல்களுடன் ஆரம்பமாகி, இன்றும் நம்மீட்பர் உயிருடனிருக்கிறார் என்ற நற்செய்தியை பாடகர் குழு உணர்ச்சி பூர்வமாகப் பாடி முடிக்க, கிறிஸ்துவின் பாடுகளும் உயிர்த்தெழுதலும் அடங்கிய ஓர் நாடகத்தினை எமது பேராயர் கலாநிதி அறிவர் எஸ். ஜெபநேசன் அவர்களின் வழிகாட்டலில், மிகவும் அழகாக நெறிப்படுத்தியிருந்தார் வண. யேசுதாசன் போதகர் அவர்கள். இந்நாடகத்தின் கதாபாத்திரங்களாக தென் இந்தியத் திருச்சபை இறையியற் கல்லூரி மாணவர்களும், உடுவில் யாழ்ப்பாணக் கல்லூரி மாணவ மாணவியரும் பங்கேற்று நடித்தனர். இந்நிகழ்ச்சியில் நல்லானின் பாத்திரத்தில் தோன்றிய இறையியற் கல்லூரி மாணவனான யோசுவா சிவஞானமும் இயேசுநாதரின் பாடுகளைச் சித்தரிக்கும் பாத்திரத்தில் உணர்வுபூர்வமாக நடித்த யாழ்ப்பாணக் கல்லூரி மாணவனான செல்வன் தயானந் யேசுதாசனும் தத்தம் கதாபாத்திரங்களில் ஒன்றித்து சபையோரைக் கண்ணீர் சிந்த வைத்தமை மனதைத் தொட்டதோர் நிகழ்வாகும். பெருந்திரளான மக்கள் மத்தியில் இத்தகையதோர் நிகழ்ச்சியை அரங்கேற்றக் கூடிய திறமை தென் இந்தியத் திருச்சபையின் இசைக் குழு இயக்குனர் கலாநிதி.செல்வி சீ. வி செல்லையா அவர்களுக்கே உரியதென்றாகும்.

இதற்காக உழைத்த ஒவ்வோர் இனிய உள்ளங்களையும் பாராட்டுகிறோம்.

## சாதனை

இந்தத்தவணையில் பாடசாலைகளுக்கிடையில் தொடர்ந்து நடாத்தப்பட்டு வரும் பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டிகளில் தொடர்ந்து முதலாம் இடத்தைப் பெற்றுவரும் உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகள் உப வலயப் போட்டியிலும் ஏனைய பாடசாலைகளைப் பெருமளவு புள்ளிகள் வித்தியாசத்திற் தோற்கடித்து வெற்றியைத தமதாக்கி கொண்டுள்ளனர். 1ம் தவணையில் நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டிகளிலும் இக் கல்லூரி மாணவியரின் திறமைகள் மிளிர்ந்தது தெரிந்ததே. உடுவில் மகளிரின 3 அணிகளுமே அதாவது 15 வயது, 17 வயது, 19 வயதுப் பிரிவின் உடற்பயிற்சி அணிகளுமே முதலிடத்தைப் பெற்று அகில இலங்கைப் போட்டிக்குத் தம்மைத தயார் படுத்திக் கொண்டிருககிறார்கள்

## நற்செய்திக் கூட்டம்

கடந்த ஞாயிறு 8- 6- 97 அன்று நவாலி தென்னிந்திய திருச்சபை மண்டபத்தில் கிறிஸ்தவ நற்செய்தி கூட்டம் நடைபெற்றது. நற்செய்தி வார நிகழ்வுகளின் ஆரம்பமாக இது அமைந்தது. அருட்திரு அனுகூலன் அடிகளாரின் ஜெபத்துடன் ஆரம்பித்த இக்கூட்டத்தில் கலைநிகழ்வுகளும் இடம் பெற்றன.

விஷேடமாக அருட்திரு டி.சி. இரத்தினசிங்கம் குழுவினர் ''சீர் திருந்திய சீலன்'' எனும் வில்லுப் பாட்டு நடைபெற்றது. நோயாளிகளுக்கே வைத்தியன் தேவை என்பது போல நற்செய்தி என்பது நற்செய்தி தேவைபடுகின்ற, நற்செய்தியை அறியாத மக்களுக்கே தேவை. எனவே, இவ்வகையான நற்செய்தி கூட்டங்களை நடாத்தி வரும் நற்செய்தி குழுவினரின் பணி சிறக்கட்டும் தொடரட்டும். இந் நிகழ்வின் இறுயாக அருட்திரு V. இராஜ்குமார் யாவருக்கும் நன்றி கூறினார். பேராயர் கலாநிதி S: ஜெபநேசன் அடிகளாரின் ஜெபத்துடனும், ஆசீர்வாதத்துடனும் நிகழ்வு நிறைவெய்தியது.

## நினைவில் நிறுத்துக

ஜூலை மாதம்

6- ஆதீன ஞாயிறு
10- V. T. C. திறப்புவிழா அளவெட்டி
11- சிலப்பதிகார விழா யாழ் கல்லூரி
12- பிள்ளைகள் விழா உடுவில்
18- நிதி ஆதனக்குழு
18 — 20 DCC ஆசிரியர் கருத்தரங்கு
22- ஆதீன நிர்வாக சபை
25- பரியாக்கோபு தினம்
25. இறையியல் மகாநாடு (அம்பிட்டிய) ஆரம்பம்

## பிறந்த நாள் வாழ்த்துக்கள்

சடந்த 05- 06- 97 இல் தனது 70வது பிறந்த நாளைக் கொண்டாடிய திருமதி ஈ. ஆர் அம்பலவாணர் அவர்களுக்கு 'உதயதாரகை'யின் வாழ்த்துக்கள்.

# திருச்சபை ஐக்கியத்தின் பொன் விழா ஆண்டு 1947 - 1997



## "ஜெகநாத குரு பரநாதா" இயற்றியளித்த

# வீரமா முனிவர்

வானமனைத்தும் அளந்த தமிழென வாழ்த்திய மொழியை முதன்முதல் வையமறியச் செய்த பெருமைக் குரியவர் வீரமாமுனிவர். இற்றைக்கு வளர்ந்து விட்ட புதிய துறைகள் பலவற்றுக்குத் தமிழில் முதலில் வழிகோலியவர் அவர். முப்பது வயதுக்குமேல் தமிழ் கற்கத் தொடங்கி, முத்தமிழில் துறைபோகிய இத்தாலியர் அவர். அவ்வித்தகரின் வாழ்க்கையைப் பற்றி விவரித்துக் கூறும் நூல்கள் பலப் பல. எனினும் அவையனைத்தும் பெஸ் அடியார்கள் ஆங்கிலத்தில் இட்ட புள்ளியை மையமாக வைத்துக் கோலம் புனைய முனைந்தவையே எனலாம்.

கான்ஸ்டண்ட் ஜோசப் பெஸ்கி என்னும் இயற்பெயர் பெற்ற வீரமாமுனிவர் இத்தாலி நாட்டில், வெனிஸ் மாநிலஞ் சார்ந்த காஸ்திகிளியோனே என்னும் ஊரில் பிறந்தவர். கவுண்ட் கொண்டல்போ பெஸ்கி என்பாரும், எலிஸபெத் பெஸ்கி என்னும் அம்மையாரும் இவருடைய பெற்றோராவர். இவரது இளமைக்கால வரலாறு இதுவரை தெளிவுறவில்லல. கி. பி. 1689 - ஆம் ஆண்டு, நவம்பர்த் திங்கள் எட்டாம் நாள் பிறந்தார்; பதின்மூன்றாம் நாள் ருதிநீராட்டுப் பெற்றார்; 1698 - ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள், இருபத்தொன்றாம் நாள் இயேசு சபையிற் சேர்ந்தார்; இத்தாலி, இலத்தீன், பிரெஞ்சு, கிரேக்கம் முதலிய மொழிகளில் புலமை பெற்றார்; அடுத்துத் தத்துவம் பயின்றார்; பின்னர் மறையியல் கற்றார். 1709 - ஆம் ஆண்டு, செப்டம்பர்த் திங்கள், குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார் என்னும் செய்திகள் மட்டும் தெரிய வருகின்றன.

இந்தியாவிற்குச் சமயப்பணி யாற்ற 1710 - ஆம் ஆண்டு வந்தார். இலிஸ்பனிலிருந்து கப்பலில் கோவாவுக்கு வந்து, அங்கிருந்து கொச்சிக்குச் சென்றார். கொச்சிக்கருகில் உள்ள அம்பலக்காட்டுக் குருமடத்தையடைந்தார். பின்னர் கடற்கரை வழியாகத் தூத்துக்குடிப் பகுதிக்கு வந்தார். 1711, மேத்திங்கள், எட்டாம் நாள் மதுரை மறைபரப்பு மாநிலத்தைச் சார்ந்த காமநாயக்கன்பட்டியை அவரது பணித்தளமாகக் கொண்டார். தமிழகத்தில் பணியாற்றும் துறவியர், தமிழராகவே மாற வேண்டும்; தமிழரோடு தமிழராக ஒன்றித்தல் வேண்டும் என்னும் நெறியை அவருக்கு முன் வகுத்தச் சென்றவர் தத்துவ போதகர் என்னும் இராபர்ட் டி நோபிலி அடிகள். அவரைப் பின்பற்றித் தம் நடையுடை முறைகளை மாற்றிக் கொண்டு தமிழ் முனிவராகச் செயல் படத் தொடங்கினார்.

வீரமாமுனிவர் தம் சமயப்பணிக்காகத் தமிழகமெங்கணும் சென்றுள்ளார். போக்குவரத்து வசதிகளற்ற 18 - ஆம் நூற்றாண்டில் ஒரே ஆண்டில் பலவிடங்களுக்குச் சென்று பணியாற்றியுள்ளார். காமநாயக்கன்பட்டியை யடைந்த அதே ஆண்டில், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த புதுப்பட்டி, குருக்கள்பட்டியிலும் பொறுப்பேற்றார். அவ்வாண்டு நவம்பர்த் திங்களில் திருச்சிராப்பள்ளியையடுத்த ஆவூரில் இருந்தார். தஞ்சாவூரில் அரசுக்குட்பட்ட அய்யம்பட்டிபகுதியிலும் தொண்டாற்றினார். மறு முறை 1731 - இல் குருக்கள் பட்டியில் பொறுப்பேற்றதோடு கயத்தாறு, காமநாயக்கன்பட்டி முதலிய இடங்களையும் கண்காணித்து வந்தார். 1716 - இல் மறவ நாட்டிலும், மதுரையிலும் பொறுப்பேற்றுள்ளார்,

1717 - இல் உடல் நலக்குறைவால் புதுச்சேரி சென்று திரும்பிக் காவிரிக் கரையிலுள்ள வடுகர்பட்டியில் பணியாற்றினார். 1720, 21 - ம் ஆண்டுகளில் ஏலாக்குறிச்சியில் வாழ்ந்ததாகத் தெரிகிறது. 1726 - இல் மறைத்தொண்டு புரிந்ததற்காகக் கொலை செய்யப்பட்ட அருளானந்தரின் புதுமைகள் பற்றி ஆய்ந்தரிய மறவ நாடு சென்றார்.

1727 முதல் 1740 வரை ஆண்டுகள் வீரமாமுனிவர் வாழ்வியலின் பொற்காலம் ஆகும். மரி அன்னைக்கு ஏலாக்குறிச்சியை அடுத்த திருக்காவலூரில் ஆலயம் எழுப்பியதும் தமிழ் அன்னைக்குக் கோனான்குப்பத்திலிருந்து காப்பியம் புனைந்தும், வேறுபல இலக்கிய இலக்கண, உரைநடை, அகராதிகளைப் படைத்தளித்துப் பெருமை கொண்டதும் இக்காலமேயாம். சந்தாசாகிப் போன்றோரின் அரசுத் தொடர்புகள் கிட்டியதால் பெருஞ்சிறப்புக்கள் கொண்டதும் இக் காலத்தே தான்.

1740 - இல் வீரமாமுனிவர் வாழ்க்கை இறங்குமுகம் காணத் தொடங்கியது. சந்தாசாகிபின் வீழ்ச்சி வீரமாமுனிவரையும் தாக்கியது. அவர் வாழ்ந்த பகுதியில் அமைதி காண இயலவில்லை. 1742 - இல் அப்பகுதியைவிட்டு நீங்கித் தூத்துக்குடி, மணப்பாடு ஆகிய பகுதிகளுக்கு வந்து வாழ்ந்தார். 1746 - இல் அம்பலக்காட்டுக் குருமடத்திற்கு போய்ச் சேர்ந்தார். அங்கு. 1747, பிப்ரவரித் திங்கள், 4 - ஆம் நாளில் இறைவன் திருவடியடைந்தார்.

முப்பதாம் வயதில் தமிழகம் போந்த வீரமா முனிவர் மூப்பத்தாறாண்டுகள் சமயப் பணியாற்றினார். அப்பணிக்கிடையே அவரியற்றிய அரிய படைப்புக்கள், புரிந்த மொழிப் பயணிகள் அளப்பரியன. அவற்றை அறிந்து போற்றிப் பரவுதல் அறிஞர் கடனாம். — இன்னாசி

# திரு C. E. இராஜசிங்கம்

— பேராயர் S. J. —

திரு. C. E. இராஜசிங்கம் 18- 4. 97 சனிக்கிழமை அவுஸ்திரேலியாவில் மெல்போர்னில் அமைந்திருக்கும் அவருடைய மூத்த மகள் இல்லத்தில் இவ்வுலக வாழ்வினை நீத்தார் திரு இராஜசிங்கம் அவர்கள் யாழ்ப் பாணத்திற் பணியாற்றிய துறைகள் பல. யூனியன் கல்லூரி ஆங்கில ஆசிரியர், யூனியன் கல்லூரித் துணையதிபர், கிறிஸ்தவ மாணவ இயக்கத்தின் ஆர்வலன், உதயதாரகை ஆங்கிலப் பத்திராதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி ஆளுநர்சபைச் செயலாளர் எனப் பல நிலைகளில் CER ஈடுபட்டுழைத்தார். இத்துறைகளிலெல்லாம் என்றுமே அழிந்து போகாத தமது முத்திரையைப் பதித்துள்ளார்.


அவர் நீண்ட காலமாக ஈடுபட்டிருந்த பணி யூனியன் கல்லூரி ஆங்கில ஆசிரியர் என்பதேயாகும். ஆங்கில இலக்கியம் இவர் இரத்தத்தில் ஊறியது. சாதாரண உரையாடலில் கூட இயகோ, டேஸ்டிமோனா காஷியஸ், சிட்னிகாட்டன், ஜுலியத் பற்றிய குறிப்புக்கள் இழையோடிருக்கும். ஷேக்ஸ்பியரின் நூல்களைப்படித்து ரசித்து அச்செல்வங்களை இளையதலைமுறையினருக்கு வாரி வாரி வழங்கிய பெருமை இவருடையது. ஆங்கில இலக்கியம் மட்டுமன்றி ஐரோப்பிய வரலாறும் CER அவர்களுக்குக் கைவந்த கலை. ஐரோப்பிய நாகரிகத்தின் சிறந்த அம்சங்களையெல்லாம் CER தமது நடையுடை பாவனைகளாற் வெளிப்படுத்திக் கொண்டேயிருந்தார்.

திரு. CER மிக இளவயதிலேயே யூனியன் கல்லூரியின் துணையதிபரானார். திரு. CER அவர்களும் திரு. I P. துரைரத்தினம் அவர்களும் தெல்லிப்பழையை கட்டிக் காத்து வளர்த்தனர். தெல்லிப்பழையார் நாகரிகத்திலும் கல்வியிலும் மேம்பட்டு நிற்பதற்கு இவ்விரு கல்விமான்களும் ஆற்றிய சேவை மகத்தானது. திரு. I.P.T தமது ஆளுமையால் மாணவர்களைக் கவர்ந்தவர். திரு. C.E.R அந்த மாணவர்களுக்கு மேலைத்தேயநாகரிகத்தைக்கற்றுக் கொடுத்தார். யூனியன் கல்லூரி மாணவர்கள் இன்று உலகெங்கும் உயர்பதவிகளில் சிறந்து விளங்குகின்றனர். அவர்களிற்பலர் இவ்விரு ஆசிரியர்களுக்கும் தாம் எவ்வளவுக்குக் கடமைப் பட்டிருக்கின்றனர் என்று அறிக்கையிடுவதைகாணலாம்.

திரு. CER அவர்கள் மிகுந்த ஆர்வத்தோடு பணியாற்றிய துறை பத்திரிகை ஆகும். யூனியன் கல்லூரிச் சஞ்சிகையையும் பின்னர் உதயதாரகை ஆங்கிலப் பகுதியையும் ஆர்வத்தோடு வெளியிட்டவர், உதயதாரகையின் நீண்ட கால ஆங்கிலப் பத்திராதிபராகவிருந்த திரு. L. S. குலதுங்கம் இவருடைய ஒன்றுவிட்ட சகோதரர் திரு. குலதுங்கம் அவர்கள் பத்திராதிபராகவிருந்தபோது CER துணைப்பத்திராதிபராகவிருந்தார் பின்னர் ஆங்கிலப் பகுதியின் ஆசிரியராக அமர்ந்தார். இவருடைய ஆங்கிலத் தலையங்கங்களில் ஆங்கில இலக்கியம் தாண்டவமாடும், கிறிஸ்தவ இறையியல் மிளிரும், ஐரோப்பிய வரலாறு தலைகாட்டும் இவர் சற்று வயது முதிர்ந்த காலத்திலேயே உதயதாரகைப் பத்திரிகையின் ஆசிரியப் பொறுப் பேற்றார். அவருடைய ஆசிரியத் தலையங்கத்தை வாசித்த அனைவரும் இந்த அறிஞன் இந்த நாளும் எங்கேயிருந்தார்? என்ற கேள்வியையே கேட்டனர்.

திரு CER அவர்கள் யாழ்ப் பாணக்கல்லூரியின் பழைய மாணவன். வண. பிக்னல், திரு J. V. செல்லையா ஆகியோரின் ஆளுமையினாற் கவரப்பட்டவர். வண. பிக்னல் அவர்களைப்பற்றிய பல கதைகளைப் பிற சந்ததியாருக்குக் கூறி மகிழ்ச்சியடைந்தார். திரு >

# துணைவேந்தர் துரைராஜா நினைவு



மறைவு 11- 06 1995

நிமிர்ந்த நடையினன் நேரிய உள்ளத்தான்
பொறியியல் துறையில் உலகில் உயர்ந்தோன்
தமிழர் கல்வியை உயிராய் நினைத்தோன்
எம்மதத்தவராயினும் அன்புடன் தழுவுவோன்
சினமது அறியான் சிறியன சிந்தியான்
துரைராஜ் நாமம் என்றென்றும் வாழி!!

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் ...



# நெடுந்தீவில் நான்கு நாட்கள்

யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவ மாணவர் ஒன்றியத்தினரால், வாலிபர் பாசறை ஒன்று 21 முதல் 25-05-97 வரை நெடுந்தீவில் நடாத்தப்பட்டது. இதில் புரட்டஸ்தாந்து, கத்தோலிக்க, இந்து சமயங்களை சேர்ந்த 45 மாணவர்கள் கலந்து கொண்டனர். பல்வேறு அசௌகரியங்களுக்கு மத்தியிலும் நெடுந்தீவை சென்றடைந்தமை மாணவர்களுக்கும், அங்குள்ள மக்களுக்கும் புத்துணர்ச்சியூட்டும் அனுபவமாயிருந்தது.

இந்நிகழ்வினை அருட்திரு S. மில்ரன் ஒருங்கமைத்திருந்தார். நெடுந்தீவில் மாணவர்களுக்கான தங்குமிடவசதி, உணவு போன்ற யாவும் நெடுந்தீவு தென்னிந்திய திருச்சபை ஊழியன் அருட்திரு N. T. ஜெயநேசன் அவர்களால் செய்து கொடுக்கப்பட்டது.

21ம் திகதி, பிற்பகல் 4 மணியளவிலேயே போய் சேர்ந்ததால், அன்றைய இரவு 'புரட்சிப்பூக்கள்' எனும் சமூக விழிப்புணர்வை சித்தரிக்கும் திரைப்படம் ஒன்றை பார்த்துவிட்டு படுக்கைக்கு சென்றனர். மறு நாளிலிருந்து யாவும் நேரசூசிகையின்படி நடைபெற்றன. பாசறைக்கான தலையங்கமாக, நீ காண்பது என்ன?' என்பது தெரிவு செய்யப்பட்டிருந்தது.

அருட்சகோ ஈனோக் புனிதராஜா அவர்கள் 'இன்றைய உலகின் யதார்த்தம்' குறித்தும், அருட் சகோ. யூட் சுதர்ஷன், 'கிறிஸ்துவை அடிப்படையாக கொண்டு வாழ்வின் அர்த்தத்தை தேடுதல்' எனவும், அருட்தந்தை பொன்பேர்ட் 'இன்றைய சவால்களுக்கு மானிடத்தின் பதில்' குறித்தும் பேசினர். வைத்திய கலாநிதி சிவசங்கர் 'என்னை நான் காண்பது எவ்வாறு?' என்ற தலைப்பில் உரையாற்றினார், தானியேல் நூலை மையமாககொண்டு சகோ. ஹரிகரன் உரையாற்றினார்.

தினமும் மாலைநேர விளையாட்டுக்களில் ஹரிகரன் வழிநடத்தினார். அதன்பின் சிறிதுநேரம் ஊர் மக்களுடன் மாணவர்கள் அளவளாவினர்.

இறுதிநாள் நிகழ்வுகள் மிகவும் விறுவிறுப்பாய் அமைந்திருந்தன. கேள்வி நேரம் மிகவும் அர்த்தமுடையதாக, ஆழமானதாக காணப்பட்டது. குதூகல இரவு (Fun Night) நடைபெற்றது. இதற்கு நெடுந்தீவு அரசினர் வைத்தியசாலையில் பணியாற்றும் வைத்திய குடும்பமான திரு திருமதி யோகேஸ்வரன் பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்டு சிறப்பித்தனர். அன்று

(4ஆம் பக்கம் பார்க்க)

## உதயதாரகை

✻✻✻

## பர்னபா என்ற புனிதன்

ஜூன் மாதம் 11ம் திகதி புனித பர்னபாவின் தினமாகும். கிறிஸ்துவின் வாழ்வைத் தொடர்ந்து லட்சோப லட்சம் மிஷனரிமார் உலகெங்கும் சென்று கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவித்தனர். பர்னபா மூத்த மிஷனரிகளுள் ஒருவர் என்பது வரலாறு காட்டும் உண்மை.

பர்னபா என்றால் தேற்றரவாளனின் மகன் என்று பொருள்படும். சாந்தி தருபவர்; அமைதி கொடுப்பவர்; சமாதானப்பிரபு என்றெல்லாம் பொருள் கொள்ளலாம்.

பர்னபா சீப்புரு தீவில் வாழ்ந்த யூதக்குடும்பத்திற் பிறந்தவர். எருசலேமில் வாழ்ந்த யோவான் மாற்குவிற்கு இவர் ஒன்றுவிட்ட சகோதரர். ஆரம்ப காலத் திருச்சபையினர் தம் ஆஸ்திகளையெல்லாம் விற்று அப்போஸ்தலரிடம் கொடுத்து அவர்களோடு வாழ்ந்தனர். புனித பர்னபாவும் அப்படி வாழ்ந்த ஒரு புனிதர். லூக்கா இவரைப்பற்றி எழுதும் பொழுது தூய ஆவியினாலும் விசுவாசத்தினாலும் நிரப்பப்பட்ட நல்ல மனிதர் என்று குறிப்பிடுகின்றார் (அப் 11: 24) இந்தப்பக்தனின் தினத்தில் அவர் செய்த நான்கு நல்ல காரியங்களை நினைவு கூருவோமாக.

கிறிஸ்தவர்களைத் துன்புறுத்திய சவுலைப் பழம் பெரும் அப்போஸ்தலர் சந்தேகக்கண்ணுடன் பார்த்தனர். அவர்களின் சந்தேகங்களைப் போக்கி சவுலை அணைத்துக் கொள்ளும்படி செய்தவர் பர்னபா.

புற ஜாதிகள் மத்தியில் நற்செய்தியை முதன் முதலாக அறிவித்தவர்பர்னபா.

சின்னாசியா எங்கணும் பவுலைக் கூட்டிச் சென்று நற்செய்தியைப் பிரசங்கித்தவர் பர்னபா. இதுவே பவுலின் முதலாவது நற்செய்திப்பயணம். எருசலேம் மகாநாட்டில் பவுலுக்குத் துணை நின்று புறஜாதியார் நேரடியாகவே திருச்சபைக்குள் இணைந்து கொள்ள வழி வகுத்தவர் பர்னபா.

இந்தப் புனிதனை இந்நாளில் நினைவு கூருவது அனைத்துக் கிறிஸ்தவர்களினதும் கடனாகும்.

## ஈரடிக் குறள்

### முதுமைச் சிறப்பு

★ நரை வந்ததென்று டை தடவிய மாந்தரெல்லாம்
நரையொன்றே காப்பென்றறிவர்.

★ முதியோர் எனப்படுவோர் யாரெனின் அவர்தாம்
ஆமிக்கும் மாமிக்கும் அஞ்சாதவர்

★ இல்லதெ வீட்டில் முதியவர் உண்டெனின்
உள்ளதெல முதியவர் இல்

★ பேறெனப்பட்டதே முதுமை அதுவும்
கூனலுடன் தோன்றின் நன்று.

★ மூப்பின் துணையின்றி தனி வழியே செல்லல்
அழிவின் பாதைக்கு நெறி

★ குழந்தையைக் கைதனில் சுமந்து செல்லும் குரிசில்
நிலமிடை நீடு வாழ்வான்

★ குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும் மஞ்சலழகும்
துன்பமளிக்கும் உணர்.

★ 'வாலிபமும்' தோள்வலியும் ஏறுபோல் பீடுநடையும்
ஆபத்திற்குதவுமோ கொல்

★ அறிவில் முதிர்ந்த முதியோரின் இல்லமெனும்
பெருமையுடைத்து இந்நாடு

★ செல்வத்துட் செல்வம் முதுமை அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை

ஜெ. சீலன்

## முழு மனிதன் யார்?

அச்சமின்றி வாழ்பவனே முழுமனிதன்
ஆருடம் பார்ப்பவனோ அரைமனிதன்
இச்சையடக்கி வாழ்பவனே இறைமனிதன்
ஈரநெஞ்சமற்றவனோ குறைமனிதன்
உச்சநோக்கு கொண்டவனே முழுமனிதன்
ஊதாரியாய் வாழ்பவனோ அரைமனிதன்
எச்சிலையும் ஈயாதவன் குறைமனிதன்
ஏழைக்கிரங்குபவன் இறைமனிதன்
ஐங்குணம் படைத்தவன் நிறைமனிதன்
ஒருத்தியோடு வாழ்பவனே முழுமனிதன்
ஓச்சுத்திறன் பெற்றவனே இறைமனிதன்
ஔவை பாடல் செயல்படுவோன் நிறைமனிதன்
எ<sup></sup>000கென இயங்குபவன் எந்திரமனிதன்

இயற்றியவர்
பேராயர் மா. அசரியா
சென்னைப் பேராயம்

## திரு C. E...

J. V செல்லையா அவர்களின் பேச்சு வன்மையையும், ஞாபக மறதியைப்பற்றியும் சொல்லிச் சொல்லி மகிழ்வார் நீண்ட காலத்திற்குப் பின்னர் அவர் யாழ்ப்பாணக் கல்லூரி ஆளுனர் சபைக்குத் தெரிவு செய்யப்பட்டு அதன் செயலாளரானார். இக் கடமையைச் செவ்வனே செய்து கொண்டிருந்த காலத்திலே தான் CER அவுஸ்திரேலியா பயணமானார். 1993ம் ஆண்டு யான் அவுஸ்திரேலியா சென்ற பொழுது திரு.CER குதூகல உணர்ச்சியுடன் காணப்பட்டார். 1996ல் அவரைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டவில்லை' தமது மகளின் வீட்டிலிருந்து மிகுந்த சோர்வுடன் எனக்கு ரெலிபோன் செய்தார். அவருடன் பேசுவது அதுதான் கடைசித் தடவை என்று நான் எணணவில்லை. நான்கு மாதங்களுக்குப் பின்னர் அவர் மறைந்து விட்டார் என்ற செய்தியைக்கேட்டு நான் திகைப்படைந்தேன்

இவருடைய தந்தையார் திரு. J. V. செல்லப்பா அவர்கள் 1952ல் மரித்தபோது பேராயர் குலேந்திரன் பின்வருமாறு எழுதினார்.

',திரு: செல்லப்பாவின் வாழ்வு சுயநலம் கருதாத வாழ்வு. அவர் வாழ்வில் விரும்பியதெல்லாம் தனது மனசாட்சிப்படி சேவைசெய்ய வழியேற்படவேண்டும் என்பதுதான். இதனைச் செய்வதிலே தான் அவர் முழுமூச்சாக ஈடுபட்டுழைத்தார். மக்கள் ஆதரவோ எதிர்ப்போ அவரைப் பாதித்ததில்லை அவருடைய வாழ்வு மனிதனுக்கு கடவுள் அளித்த மகோன்னத கொடைகளில் ஒன்று'' திரு, J. V. செல்லப்பாவின் கனிஷ்ட புத்திரனைப் பற்றியும் நாம் இதனையே கூறலாம்.

# சிறார் சோலை



இவ்வாரச் சிந்தனைக்கு:-

"உப்புக்குச் சிறப்பு - அதன் உவர்ப்புத் தன்மை
கிறிஸ்தவர்களுக்குச் சிறப்பு - அவர்களின்
சாட்சி வாழ்வு"

## அன்பான தம்பி தங்கைகளே!

மீண்டும் இன்னோர் இதழில் உங்களைச் சந்திப்பது குறித்துப் பெருமகிழ்வடைகிறேன். ஓர் ஊரில் ஒரு விவசாயி வாழ்ந்து வந்தார். தனது புத்திரர்கள் நால்வரும் உழைத்து முன்னேறாமல்; சோம்பேறிகளாக இருந்து, தான் சம்மாதிப்பதை மட்டுமே நம்பி கொண்டிருந்ததைக் கண்டு மனம் வெதும்பினார். எனவே தான் இறக்கும் தரவாயில் தன் பிள்ளைகளை அருகில் அழைத்து "பிள்ளைகளே - கவனமாகக் கேளுங்கள், எனது தகப்பனார் தனது காலத்திலே, ஒரு புதையல் ஒன்றை வயற்காணிக்குள் தாட்டிருந்தார் நீங்கள் முயன்றால் அதை எடுக்கலாம்" என்று கூறி இறந்து போனார்.

பிள்ளைகள் நால்வரும் மண்வெட்டிகளை எடுத்துக்கொண்டு போய் வயலைக் கொத்த ஆரம்பித்தனர். நாட்கள் ஓடிக்கொண்டிருந்ததேயொழிய புதையல் அகப்படவில்லை. எனினும் மனஞ்சோராமல் தொடர்ந்து முயன்றனர். பிள்ளைகள் ஒரு நாள் இவ்வாறு இவர்கள் நிலத்தைக் கொத்திக்கொண்டிருந்த போது ஒரு பெரியார் அவ்வழியே வந்தார் சங்கதி கேட்டார். பிள்ளைகளும் சங்கதி கூறினர். பெரியார் சிரித்துவிட்டு, நன்கு யோசனை செய்து "உங்களது அப்பா சொன்ன புதையல், அதுவன்று. நீங்கள் சாட்டோடு சாட்டாக நன்கு நிலத்தினைப் பண்படுத்தி விட்டீர்கள். இனி இந் நிலத்தில் நெல்மணிகளை விதையுங்கள். ஒவ்வொரு வருடமும் உங்களுக்கு புதையல் கிடைக்கும்" என்று அறிவுரை பகர்ந்தார்.

அறிவுரையின் படி ஒழுகிய புதல்வர்கள் வருடாவருடம் சிறந்த புதையலை தமது வயல் நிலங்களில் இருந்து பெற்று வந்தனர். இதுவே அவர்களது தகப்பனார் கூறிய புதையலின் உட்பொருள் என உணர்ந்து பேருவகை பெற்றனர்.

இறைவன் கூட நாம் உழைத்து உண்பதைத் தான் விரும்புகிறார். சும்மா இருந்து சாப்பிடுவது இறைவனுக்கு விருப்பமற்ற காரியம். இதை உணர்ந்து - சிறுவர்களாக இருக்கும் போதே எம்மை ஆயத்தமாக்குவோமா?

### சிறார் சிரிப்பு

ஒருவர் :- "உங்களிடம் கடித உறைகள் உள்ளதா"
மற்றவர் :- "ஆம் உள்ளது. ஆனால் Hundred தான் உள்ளது"
முதலாமவர் "பரவாயில்லை எனக்கு நூறு மட்டும் தந்தால் போதும் மிகுதியை நீங்களே வைத்திருங்கள்".

### சென்றவாரப் புதிரின் விடை

அது தென்னிந்திய திருச்சபையின் மகுட வாக்கியமாகும்.

### இவ்வாரப் புதிர்

"இயேசு கிறிஸ்துவே வாழ்வின் ஒளி" என்பது எதன் மகுட வாக்கியம்?

தெரிந்தவர்கள் விடையை எழுதி அனுப்புங்கள்
தெரியாதவர்கள் அடுத்த இதழை புரட்டுங்கள்.
சரி தம்பி தங்கைகளே!! விடைபெறும் நேரம் வந்து விட்டது
மறு இதழில் கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்
தாரகை அண்ணா

# கர்த்தருக்குள் மரித்தவர்கள்

## மேசி தேவமணி பரமானந்தம்

ஏழாலை தெற்குத் சபையைச் சபையைச் சேர்ந்த திருமதி. மேசி தேவமணி பரமானந்தம் 23-05-97 அன்று காலமானனர். இவரது இறுதி ஆராதனை, 28-05-97 அன்று கொழும்பில் நடைபெற்றது. அருள்திரு ஏ. ஜெயக்குமாரன், அருள்திரு ரி. ஜெயச்சந்திரன், ஆகியோர் ஆராதனையை நடாத்தினர். அருளுரையை அருள்திரு வி. என். தர்மகுலசிங்கம் ஆற்றினார். அதே நாள் ஏழாலை தெற்கிலுள்ள அன்னாரின் இல்லத்தில் அவரை நினைவு கூர்ந்து ஒரு விசேட ஆராதனை நடாத்தப்பட்டது. சபை ஊழியன் அருள்திரு ஏ. சே. சுரேந்திரன் ஆராதனையை நடாத்த, சேகரக்குருவான வண. எஸ். மில்ரன் அருளுரை ஆற்றினார் விசேட பாடல் திருமதி மாலா தேவகுமாரனால் பாடப்பட்டது கிராமசேவையாளர் திரு சுப்பிரமணியம் இரங்கலுரை நிகழ்த்தினார். எஸ் ஜெபநேசன் அவர்களது ஜெபத்துடனும் ஆசீர்வாதத்துடனும் ஆராதனை முடிவுற்றது.

## லிசி சின்னத்துரை.

அராலித்திருச்சபையைச் சேர்ந்த லிசி சின்னத்துரை அவர்கள் அவுஸ்திரேலியாவிற் (அடிலைட்) 10-5 97 இல் மரணமடைந்தார். இவர் அமரர் ஜோன் அல்பிரட் சின்னத்துரை அவர்களின் மனைவியும்; அமரர் சொலமன் சிவப்பிரகாசம் அருளம்பலம் அவர்களின் இளைய மகளும்; ஸ்ரான்லி கலாநிதி, வில்சன், புளோரா, விக்டர், உவாட்ஸன், வால்டர், றொபேர்ட் ஆகியோரின் அருமைத்தாயரும்; அமரர் றோஸ் ஜெயரத்தினம், அமரர் ஐசக் அருளம்பலம், திரு. கிறிஸ்ம அரும்பலம் ஆகியோரின் சகோதரியுமாவார்

## நெடுந்தீவில்...

நடந்த பட்டிமன்றம் ஒன்றிற்கும் நெடுந்தீவை சேர்ந்த புலவர் அரியநாயகம் அவர்கள் நடுவராக இருந்து விறுவிறுப்பாக கொண்டு சென்றார்; வைத்தியர் அவர்கள் நெடுந்தீவின் புவியியல், கலாச்சாரம் சாந்த பண்புகளை எடுத்துக் கூறினார். 25ம் திகதி, ஞாயிறு காலை வழிபாடு நெடுந்தீவு தென்னிந்திய திருச்சபை ஆலயத்தில் நடைபெற்றது இது திருவிருந்து வழிபாடாக, அருட்திரு N. T. ஜெயநேசன், S. மில்ரன் ஆகியோரால் நடத்தப்பட்டது.

வழிபாட்டு நிகழ்வுடன் பாசறை நிறைவெய்தி, யாவரும் புறப்பட்டனர். அருட்திரு. N. T. ஜெயநேசன் குடும்பத்தினர், பாசறை பங்குபற்றுநர்களை மிகவும் சிறப்பாக பராமரித்தனர். நெடுந்தீவு கூட்டுறவு சங்க தலைவர், டிராக்டரில் மாணவர்களை ஏற்றி படகுத்துறைக்கு அழைத்து வந்தார். அங்கு பல மக்கள் வழியனுப்புவதற்காக வந்திருந்தனர். குறிப்பாக, அருட்தந்தை பொன்பேர்ட், புலவர் அரியம், தோழர் காளிதாஸ் நெடுந்தீவு மக்கள் ஒன்றிய தலைவர், அருட்திரு. ஜெயநேசன், தென்னிந்திய திருச்சபை மக்கள், வேறும் பலர் கையசைத்து விடைகூற படகு யாழ்ப்பாணம் நோக்கி புறப்பட்டது.

✠ யூட்

## நல்லதம்பி சுகிர்தமலர்

சங்கானைச் சபையைச் சேர்ந்த நல்லதம்பி சுகிர்தமலர் 01-06-97 அன்று காலமானார். இவர் அமரர் ஆ. நல்லதம்பி அவர்களின் அன்பு மனைவியாரும்; திரு. ஸி. ஜெயரத்தினம், (பொருளாளர்-யாழ் அத்தியட்சாதீனம்) திருமதி S. கணபதி, செல்வி S. நவமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். இவரது நல்லடக்க ஆராதனை அன்னாரின் இல்லத்தில் 02-06-97 அன்று நடைபெற்றது- சேகரக்குரு எஸ் பி. ஜெயங்கம், சபை ஊழியன் பி. தேவதாஸ் என்போர் ஆராதனையை நடாத்தினார்கள். இறுதி செபமும், ஆசீர்வாதமும் இளைப்பாறியபேராயர் டி. ஜே. அம்பலவாணர் அவர்களால் நிகழப்பெற்றது.

## நா. சண்முகம்

காரைநகரைப் பிறப்பிடமாகவும், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட நா, சண்முகம் அவர்கள் 29-5-97 இல் அகால மரணமடைந்தார். இவர் விஜயலக்ஷ்மியின் அன்புக்கணவரும்; பேள் ரஞ்சினி' விஜேயந்திரன், பார்த்திபன். வைதேகி ஆகியோரது அன்புத் தந்தையும் ஆவார். இவரது நல்லடக்க ஆராதனை 30-05-97 வெள்ளி அன்று மானிப்பாயில் நடைபெற்றது. இவ்வாராதனையில் பேராயர் எஸ். ஜெபநேசன் அவர்களும் பங்குபற்றினார். அருள்திரு டி. ஆர் அம்பலவாணர் அஞ்சலி உரையை நிகழ்த்தினார். இளைப்பாறிய பேராயர் டி. ஜே. அம்பலவாணரும் இவ்வாராதனையில் பங்கு பற்றினார். கல்லறையில் மானிப்பாய் சபைக்குரு ஏ. வி. ஜேசுதாசன் அவர்கள் ஆராதனையை நடாத்தினார்கள்.

# OBITUARY

## Mrs. Navamani Mills

Mrs. Navamani Mills-Beloved wife of Late Rev. Jeyam Mills Passed away in Australia on 31-05-97. Loving mother of Jean, Esterine, Kulam, Prem and Christy. Sister of Late Prof. Luther Jeyasingam, Late Luther Thuraisingam, Late Dr. Luther Gunaratnam. Late Luther Selvarajan and Sirenmani Rajaratnam Luther Rajaratnam, Rosamalar Balakrishnan

Laid to Rest on 02-06-97 in Australia.

Informant:-
Sugani Rajathevan Neice

## அவுஸ்திரேலியா செல்கின்றார்.

நவாலித்திருச்சபை ஊழியன் வண. S. C. ஆர்னல்ட் அவுஸ்திரேலியா ஐக்கியப்படும் திருச்சபையின் (UCA) எட்டாவது வருடாந்த மகாநாட்டிற் கலந்துகொள்வதற்காக யூன் மாதம் முதல் வாரம் அவுஸ்திரேலியா புறப்படுகின்றார். இந்த மகாநாடு பேர்த் நகரில் யூலை 5ம் திகதி தொடக்கம் 12ம் திகதி வரை நடைபெறுமெனத் தெரிகின்றது.

இப்பத்திரிகை வட்டுக்கோட்டை ஆதீனக் காரியாலயத்தில் உள்ள அமெரிக்கன் இலங்கை மிஷன் அச்சகத்தில் உதயதாரகை முகாமையாளர் சகோ பி. தேவதாஸ் அவர்களால் 1997 ஆம் ஆண்டு ஜூன் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.